//தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3516/ஆ4/ 2024 நாள்.15.11.2024

பொருள் தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –2024–2025–ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு +2 பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் மற்றும் TML கட்டணம் ஆன்–லைன் வழியாக செலுத்துதல் –சார்பு.

பார்வை 1. அரசாணை எண் 237, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்: 21.09.2007.
2. அரசாணை (நிலை) எண். 68, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை, :18.11.2021.
3. அரசாணை (நிலை) எண்.48. பள்ளிக் கல்வித் (ஜிஇ1)த் துறை, நாள்.11.04.2002.
4.அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017338 /எச்.1 /2024 நாள் 15.11.2024

••••••••••

பார்வை 4–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் 2024–2025– ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களிடமிருந்து (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்று, அத்தொகையினை ஆன்லைன் வழியாக பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி **18.11.2024 அன்று பிற்பகல் முதல் 29.11.2024 மாலை 5.00** மணி வரையிலான நாட்களுக்குள் செலுத்திட, அனைத்து வகை மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்வுக் கட்டணம் (Exarn Fres**

| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|
| 1 | செய்முறை கொண்ட பாடங்கள் அடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.225/– |
| 2 | செய்முறை இல்லாத பாடங்கள் அடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ. 175/– |

**<u>தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர் :</u>**

I. தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

II. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

அ) SC/SCA/ST மற்றும் SC Converts (SS)<br>
ஆ) MBC/DC<br>
} பெற்றோருக்கான வருமானத்திற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை

இ) BC/BCM – பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/– க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு) மிகாமல் இருப்பவர்களுக்கு மட்டும்.

III. அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் பார்வை குறைபாடுடைய மற்றும் செவித்திறன் / பேச்சுத் திறன் குறைபாடுடைய மாணவர்கள்.

**<u>சுயநிதி/மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகள்:</u>**

சுயநிதி/மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.

**<u>+1 Arrear மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் செலுத்துதல்</u>**

பள்ளித் தலைமையாசிரியர்கள், தங்கள் பள்ளியில் +2 பயிலும் பள்ளி மாணவர்கள், மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கான தேர்வினை (+1 Arrear Subjects) தற்போது எழுதுவதற்கான தேர்வுக் கட்டணத் தொகையினை சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து பெற்று, அத்தொகையினை **<u>20.11.2024 அன்று பிற்பகல் முதல் 02.12.2024 மாலை 5.00 மணி</u>** வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, ஆன்–லைன் வழியாக செலுத்துதல் வேண்டும்.

**<u>+1 Arrear தேர்வெழுதுவதற்கான கட்டணம்</u>**

ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– மற்றும் இதரக் கட்டணம் ரூ.35/–

(உ–ம்) ஒரு பாடம் ரூ.50 + 35 = 85/–

இரு பாடங்கள் =135/– (ரூ.100 +35=135)

**அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் கட்டணம் (TML Fees)**

பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி 2024-2025- ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின் தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக, அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) ரூ.300/- செலுத்தவேண்டும்.

**ஆன்லைனில் பள்ளித் தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் கட்டணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்**

| | |
|---|---|
| STEP1: | www.dge.tn.gov.in |
| STEP2: | Online Portal for School and Educational Offices |
| STEP3: | School Login ( School User ID & Password ) Dashboard Right Hand Side ( Notification ) |
| STEP4: | Payment for HSC XII (Or)<br>Payment for +1 Arrear (Or) TML<br>Payment for HSC XII |

மேற்படி,அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் முதல்வர்கள் , 2024-2025 அனைத்து பள்ளித் ஆம் கல்வியாண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் (Exam Fees). அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் (TML Fees) ஆகியவற்றினை ஆன்-லைன் வழியாக உரிய தேதிக்குள் செலுத்திட மீள தெரிவிக்கப்படுகிறது .

//ஓம். //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள்) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.